**<u>வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என அறிதல்,, வாக்காளன் அடையாள அட்டை பெறும் வழி முறைகளை அறியவிரும்பும். தகவல் உரிமைச் சட்ட விண்ணப்பம்,</u>**

பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்.

அனுப்புநர்.

பெறுநர்.

பொதுத் தகவல் அலுவலர்.
தகவல் உரிமைச் சட்டம் 2005
வருவாய் கோட்ட ஆட்சியர் அலுவலகம்
..................................................................
பின் கோடு.................................... ,

ஐயா,

நான் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் வசித்துவருகிறேன், எனது பெயர் ............................ எனது தந்தையார் பெயர் .................................. ஆகும் எனது பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்ந்துள்ளது குறித்து பின்வரும் தகவல்களை தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

1) வாக்காளர் பெயர் பட்டியலில் எனது புகைப்படம் உள்ளதா என்றறிய எனது மற்றும் எனது தந்தை திரு ................................ தாயார் திருமதி ........................................ ஆகியோர் பெயர் மற்றும் புகைப்படம் உள்ள வாககாளர் பட்டியலின் சம்பந்தப்பட்ட பக்கத்தின் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

2) எனது பெயரை அல்லது எனது குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க எந்தப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டுமோ அந்த படிவத்தின் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

3) இதே படிவத்தை ஒளி நகல் எடுத்து வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றவர்களும் பயன்படுத்தலாமா என்ற தகவலை அளிக்க கேட்டுக் கொள்திறேன்.

4) வாக்காளர் அடையாள அட்டை பெற எந்த படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டுமோ அந்தப் படிவத்தின் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

5) இதே படிவத்தை ஒளி நகல் எடுத்து வாக்காளர் அடையாள அட்டை பெற மற்றவர்களும் பயன்படுத்தலாமா என்ற தகவலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

6) எந்த அதிகாரிக்கு மேற்படி இரண்டு விண்ணப்பங்களை அனுப்பிடவேண்டுமோ அந்த அதிகாரியின் பதவி பெயர் மற்றும் அஞ்சல் விலாசம் ஆகியவற்றை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

7) ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் வாக்காளர் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்க வேண்டுமா அல்லது எப்போது வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலமா என்பதைக் காட்டும் விதிமுறை உள்ள சம்பந்தப்பட்ட பக்கத்தின் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

8) உரிய தேதிக்குள் எனது பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்ந்தது என்று தங்களுக்கு விண்ணப்பம் அளிக்கப்பட்ட எத்தனை நாட்களுக்குள் எனக்கு தகவல் அனுப்பப்படும் என்ற தகவலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

9) பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அரசு ஆணை எண், 114. நாள் -2-08-2006 ன் ஒளி நகலையும்,. இலஞ்சம் ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகை வைக்க கடைசீயாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் ஒளி நகலையும் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

10) கடைசியாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் படி தங்கள் அலுவலகத்தில் இலஞ்சம் ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகை வைக்கப்பட்டதற்கு செய்யப்பட்ட செலவைக் காட்டும் செலவுச் சீட்டின் (Paid voucher copy ) ஒளி நகலையும், அந்தத் தகவல் பலகை தங்கள் அலுவலக பொருட்கள் பதிவேட்டில் எந்த பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதோ அந்த பக்கத்தின் ஒளி நகலையும் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

11) நான் கோரிய தகவல்களை முழுமையாக அளிக்காமல் அல்லது தவறான அல்லது பொருத்தமற்ற தகவல் அளித்தால் அப்படி செய்யும் அலுவலகருக்கு என்ன என்ன தண்டனையை அளிக்க வகை செய்யும் தகவல் உரிமைச் சட்டம் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விண்ணப்பத்திற்கானக் கட்டணம் ரூ 10 க்கான கோர்ட் கட்டண வில்லை ஒட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன் .
அவசியமானால் இந்த விண்ணப்பத்தை பிரிவு 6(3) ன் படி கையாளக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள.